1971 டிசம்பர் 4]

THIRU DURAI MURUGAN : It has been in a confused state . . .

திரு. செ. கந்தப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, இது மிகவும் முக்கியமான பிரச்சினை. இதைப்பற்றி மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் ஒற்றிவைப்புத் தீர்மானத்தின்மீது பேசும் பொழுது மிக விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். ஆனால் அதனையொட்டி அண்ணா சதுக்கத்தில் ஏற்பட்டிருக்கின்ற நிகழ்ச் சிகளைப்பற்றிச் சொல்ல இந்தப் பக்கத்திலிருக்கின்ற எங்களுக்குச் சந்தர்ப்பம் இல்லையென்றாலும் பல ஆயிரக்கணக்கான உள்ளங் களிலே . . .

THIRUMATHI T. N. ANANDANAYAKI : The hon. Member should speak on he matter before the house now.

திரு. செ. கந்தப்பன் : அவை முன்னவர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். ஆனால் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பிரச்சினை ஒழுங்குப் பிரச்சினையல்ல, உங்களுடைய அபிப்பிராயத்தினுடைய பிரச்சினை. அதற்கான வாய்ப்பு ஏற்படும்பொழுது கூறிக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து சிம்லன் பிரச்சினை, இன்னும் மற்றப் பிரச்சினைகளைப் பற்றிய ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் இருக்கின்றன. அவற்றை யெல்லாம் திங்கட்கிழமை எடுத்துக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அடுத்த நிகழ்ச்சிக்குப் போகிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : காங்கிரஸ் கட்சிக்காரர்கள் வெளி நடப்புச் செய்துவிட்டார்கள், இல்லாவிட்டால் விவாதித்திருக்க லாம் என்று சொன்னார்கள். ஒற்றிவைப்புத் தீர்மானம் நாங்களும் கொடுத்திருக்கிறோம். எனவே அவர்கள் போனாலும் நாங்கள் இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதத்திற்கு வாய்ப்பு ஒரு வேளை இருந்திருக்கலாம், அதைக்கூட நழுவ விட்டுவிட்டார்கள் என்றுதான் சொன்னேன்.

2. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(இ) ஒரு தீர்மானத்தின் மீது பேரவைத் தலைவர் தீர்ப்பளிக்கு முன் சில உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தது குறித்து.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இன்றைய தினம் எதிர்க்கட்சிக்காரர்கள் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்தார் கள். அதன்மீது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளித் தார்கள். சபாநாயகர் அவர்களின் தீர்ப்புக் கிடைப்பதற்கு முன்னாலேயே எதிர்க்கட்சிக்காரர்கள் வெளிநடப்புச் செய்வது முறைதானா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் வெளிநடப்புச் செய்யலாமா வேண்டாமா என்பது வேறு பிரச்சினை. ஆனால் அவர்கள் போனது ரொம்ப முறையானது என்பதுதான் அவையினுடைய தீர்ப்பு.

It is in perfect order.

5. அமைச்சரின் விளக்கவுரை.

சென்னை மாநகராட்சி நிலைக் குழுக்களுக்கான தேர்தல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதிகளின் 82-வது விதியின்கீழ் மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியை ஆறு நிலைக் குழுக்களின் மூலம் நிர்வகிப்பதற்காக, 1919-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டம் அண்மையில் திருத்தப்பட்டது. ஒவ்வொரு நிலைக் குழுவிலும் 11 உறுப்பினர்கள் இருப்பர். மாநகராட்சி உறுப்பினர்களிலிருந்து பெரும்பான்மை வாக்களிப்பு மூலம் இந்த நிலைக் குழுக்களின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு இத்திருத்த மசோதாவில் வகை செய்யப்பட்டது. இந்த மசோதாவைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டபோது, விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையை பின்பற்றுவது உகந்ததாக இருக்கும் என உறுப்பினர்களில் சிலர் கருத்துத் தெரிவித்தனர். பெரும்பான்மை வாக்களிப்பு மூலம் தேர்ந்தெடுக்கும் முறை குறித்த விதித்துறைகளை நீக்க அதிகாரப்பூர்வமான திருத்தம் கொடுக்கப்பட்டது. அரசு வரையறுக்கக் கூடிய முறையில் தேர்தல் நடத்துவதற்கு வகை செய்யப்பட்டது. நிலைக்குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான விதிகளை இயற்றும்போது ஒற்றை மாற்று வாக்கு மூலம் விகிதாச்சார பிரதிநித்துவ முறை பின்பற்றப்படுமென்றும் அறிவிக்கப்பட்டது.

இதற்கிணங்க, ஒற்றை மாற்று வாக்குமூலம் விகிதாச்சார பிரதிநிதித்துவ முறைக்கு வகை செய்யக்கூடிய வரைவு விதிகள் இயற்றப்பட்டு வெளியிடப்பட்டன. 1919-ம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் 348 (ஏ) பிரிவிலுள்ள விதித்துறையின்கீழ் இது குறித்து சென்னை மாநகராட்சியின் கருத்துக்கள் கேட்கப்பட்டன. மாநகராட்சி மன்றம் 11—10—1971 நாளிட்ட 709/71 எண் தீர்மானத்தில், விகிதாச்சார பிரதிநிதித்துவ முறைக்குப் பதிலாக பெரும்பான்மை வாக்களிப்பு முறையைப் பின்பற்றவேண்டுமென அரசிடம் வேண்டுகோள் விடுப்பதென்று தீர்மானிக்கப்பட்டது. விவாதங்களின் அடிப்படையிலும் விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையைப் பின்பற்றுவதற்காகக் கொடுக்கப்பட்ட உறுதிமொழிகளின் அடிப்படையிலும் இதுகுறித்து ஆழ்ந்து பரிசீலிக்கப்பட்டது. பெரும்பான்மை வாக்கு மூலம் தேர்ந்தெடுக்கும் முறை, 1961-ஆம் ஆண்டிற்கு முன்பு செயல்பட ஆரம்பித்த சென்னை மாநகராட்சி நிலைக்குழுக்களின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்